**கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 65 இன் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 106,294,775 பெறுமதியான 69 உருப்படிகள் தொடர்பாக இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 40 ஆம் பிரிவின் நிறுவனத்திற்கு நிலையான சொத்துக்களை அறிக்கையிடுவதற்காக இரண்டு முறைமைகள் முன்மொழியப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இவ்வதிகாரசபை கிரய முறைமையை (Cost Model) தெரிவு செய்துள்ளது. அதன் பிரகாரம் 47 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அதிகாரசபைக்கு பொருந்தாது. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அணு உறிஞ்சும் ஒளிர்வுக்கு 2019 திசெம்பர் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்பு செலவு ரூபா 1,215,299 மற்றும் 2018 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,836,626 ஆன வாகன திருத்தச் செலவினங்கள் கையேற்றலாக மூலதனமாக்கப்பட்ட தவறு மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் மீண்டும் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்மீண்டெழும். |

### 1.5.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | தொகை | நிச்சயமற்று காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் கடன்கொடுத்தோரால் நேரடியாக வங்கிக்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 265,165 தொகை தொங்கல் கணக்கு மீதியொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 265,165 | 01 ஆண்டு | இப்பொறுப்புக்கள் உரிய பிரகாரம் இனங் காண்பதற்கு முயற்சி எடுத்த போதும் அடையாளத்தை இனங் காண முடியவில்லை. அதனை இனங்காண முடியாத செலவு வைக்கப்பட்டதை இனங் காணப்படாத பெறுவனவாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது | நேரடி வங்கிக்கு வைப்புச் செய்யப்பட்ட பணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பின்ர கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விடுவிப்பு அடிப்படையில் சேவையிலிருந்து விடுவிப்புச் செய்யப்பட்டுள்ள பொது முகாமையாளரின் நிரந்தர | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்த |

| | | |
|---|---|---|
| சேவை இடமான ருஹுனு பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 802(1),(2),(3) | ஆய்வுகூடத்திற்குரிய இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்ட போதும் அது தொடர்பாக வேையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆய்வுகூடத்திற்குரிய இயந்திரங்கள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் எதிர்காலத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு இப்போதே முகாமைத்துவத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VI ஆம் அத்தியாயத்தின் 02 ஆம் பிரிவு | அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று விதிகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | இதுவரை ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் புறம்பாக குறிப்புக்கள் பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் இவ்வாண்டு முதல் சீராக்கி அதிகாரசபையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் குறிப்புக்களை பேணச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| i 5.4.6 ஆம் பந்தி | காலி தடல்ல அலுவலகத்திற்காக கட்டிடம் தொடர்பான நிர்மாண தவறுகளை இனங்காணுதல் மற்றம் தவறுகளை சீராக்குவதற்கு | காலி அலுவலக தொகுதியில் காணப்படும் நிர்மாண தவறுக்கள் தொடர்பாக மத்திய | உத்தரவாத காலத்தில் தவறுகளை இனங்காணுதல் மற்றும் சீர் செய்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளர் ஆராய்ச்சி பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்நிறுவகத்தினால் திருத்தம் செய்யாவிட்டால் பிடிகாசிலிருந்து திருத்தம் செய்வதற்கு முகாமைத்துவம் தற்போது தீர்மானித்துள்ளது. | நடைமுறை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |
| | ii 8.12.1 ஆம் பந்தி | பொறுப்பேற்பதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்டுள்ள சேவைகளின் தரம் தொடர்பாக சுயாதீனமாக பரீட்சிக்க வேண்டிய போதிலும் தடல்ல்டிடம் தொடர்பாக அவ்வாறான பரிசோதனையொன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காலி அலுவலக தொகுதி திட்டமடல், நிர்மாண நடவடிக்கைகள் மத்திய பொறியியலாளர் ஆராய்ச்சி பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டதால் கட்டிடத்தை பொறுப்பேற்கும் போது மேலதிக பணத்தை செலவிட்டு நிறைவேற்றிய சேவைகளின் தரத்தை பரீட்சிப்பு உட்படவில்லை | சட்டத் தேவைப் பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய 1996/27 ஆம் இலக்க கடல்சார் சுற்றுாடல் பாதுகாப்பு கழிவுப் பொருள் மீள் சுழற்சி வசதிகள் கட்டளையின் II ஆம் அட்டவணையின் 17( ஏ) பிரிவு | உராய்வு நீக்கி மூலப் பொருள் வகையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சகல சேவைகள் வழங்குனரால் ஆரம்ப வைப்பாக ரூபா 03 இலட்சம் வைப்பாக வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு புறம்பாக 03 நிறுவனங்களுக்கு உரிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் கழிவுப் பொருள் மீள் சுழற்சி வசதிகள் கட்டளையின் II ஆம் அட்டவணையின் 17(ஏ) பிரிவின் பிரகாரம் ரூபா 300,000 ஆன ஆரம்ப வைப்பினை மேற்கொள்ளாத சேவை வழங்குனர்கள் அதிகாரசபையின் கழிவுப்பொருள் மீள் சுழற்சி சேவைகளுக்காக பதிவு செய்யப்படுவதில்லை | சட்டத் தேவைப் பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | லயென தயவுடன் அறிய தருகின்றேன். | |
| (ஊ) | 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | | |
| | i 2(ii) ஆம் பந்தி | அதிகாரசபையின் அனைத்து ஆட்சேர்ப்பு நடைமுறை களை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 02/2016 சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகாரசபையின் அனைத்து பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைற தயாரித்தல் தற்போது செய்யப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் அடுத்த மாதத்திற்குள் அந்நடைமுறையை தயாரித்து நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றல் மற்றும் சமூக --- அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள் ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறை களை தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வததற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | ii 2(iv) ஆம் பந்தி | மாற்றுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02/2016 சுற்றறிக்கை யின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையுடன் இணைந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாற்றுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | மாற்றுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 50,000,017 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,952,703 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 47,047,314 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு 2020 ஆம் ஆண்டில் கப்பலொன்று மூலம் ஏற்பட்ட கடல் சார் மாசடைதல் செயற்பாடொன்றிற்காக சட்ட செயற்பாடுகள் மூலம் அறவிடப்பட்ட வருமானம் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,182,000 பெறுமதியான டிங்கி படகொன்றும் படகு என்ஜினொன்றும் 2016 பெப்ரவரி மாதம் முதல் விளைவற்று காணப்பட்டதுடன் வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தேவையான படகுகள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | எதிர்வரும் காலங்களில் அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்களிலிருந்து உயர்ந்த செயற்திறனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,800,000 பெறுமதியான அணு உறிஞ்சும் ஒளிர்வு உபகரணம் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு காலி ஆய்வுகூடத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் திருத்த வேலைகள் முடிவடைந்தவுடன் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வகையில் இந்த இயந்திரம் பொருத்தப்படவில்லை. | சொத்துக்களிலிருந்து உயர்ந்த செயற்திறனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு சேவைகளை வர்த்தக ரீதியில் வழங்கும் நோக்கில் ரூபா 66.6 மில்லியன் செலவிட்டு 2017 ஆம் ஆண்டின் போது காலி தடல்ல கரையோர வளவில் | பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக தேவையான நடவடிக்க எடுக்கப்பட்டு வருகின்றது. வர்த்தக மட்டத்தில் சேவைகளை வழங்குவதற்கு தேவையான வழிகாட்டிகள் | சொத்துக்களிலிருந்து உயர்ந்த செயற்திறனைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆய்வுகூடத்திற்காக ரூபா 54.2 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதி வரை இந்த உபகரணம் பயன்படுத்தப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுகூட சேவைகள் மாத்திரம் மேற் கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறே ஆய்வு கூடத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் வர்த்தக மட்டத்தில் பேணிச் செல்வதற்காக போதியளவு பதவியணியினர் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் காலாவதியான இரசாயனப் பொருட்களை சுற்றாடலுக்கு சாதகமாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | நாளதுவரையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

## 3.2 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபைக்குரிய ரூபா 6.8 மில்லியன் பெறுமதியான inflatable oil boom இயந்திரம் 50 அமெரிக்க டொலர் பெறுமதிக்கு 2020 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரை அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்தை குத்தகைக்கு வழங்குவதற்குரிய 2020 பெப்ரவரி 07 ஆந் திகதிய 06/MEPA/OSCP/ HIPG/2020 ஆம் இலக்க கடிதத்தில் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக கம்பனிக்குரிய ரூபா 5 மில்லியன் பெறுமதியான வங்கி | 2020 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரை அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக கம்பனிக்கு வாடகை அடிப்படையில் inflatable oil boom இயந்திரம் வழங்கப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் ரூபா 1.2 மில்லியனான வருமானமொன்று அதிகாரசபைக்கு கிடைத்தது. இக்காலப்பகுதியில் | சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிணைப்பொறுப்பொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வியந்திரத்தை வாடகைக்கு வழங்குவதற்குரிய 2020 பெப்ரவரி 20 ஆந் திகதிய 06/MEPA/OSCP/ HIPG/2020 ஆம் இலக்கமுடைய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த விலை கோரலில் குறிப்பிடப்பட்ட வங்கி பிணையின் பெறுமிதி ரூபா 02 மில்லியனாக இருந்தது. எனினும் அதிகாரசபையால் மேற்படி நிறுவனத்திற்காக இவ்வியந்திரத்தை வாடகைக்கு வழங்கும் போது வங்கி பிணைப்பொறுப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட தொற்று நோய் நிலைமையின் பேரில்வங்கி பிணைப் பொறுப்பொன்றை அக்கம்பனிக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. எனினும் inflatable oil boom இயந்திரம் வழங்கப்பட்ட நிலைமையிலேயே அதிகாரசபைக்கு மீண்டும் கிடைத்தமை காரணமாக வங்கி பிணைப்பொறுப்பு தேவைப்பாடு எழவில்லை. | |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 229 ஆகவும் உள்ளவாறான எண்ணிக்கை 174 ஆகவும் இருந்ததுடன் அதன் பிரகாரம் வெற்றிட ஊழியர்களின் எண்ணிக்கை 54 ஆக இருந்தது. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அதிகாரசபையால் சமுத்திர சுற்றாடல் உத்தியோகத்தர்கள், உதவி சமுத்திர சுற்றாடல் உத்தியோகத்தர்கள், மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு ஏற்கனவே பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளதுடன் உதவி சமுத்திர சுற்றாடல் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சமுத்திர சுற்றாடல் உத்தியோகத்தர்கள், மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நேர்முக பரீட்சை நடாத்தப்பட்டுள்ளதுடன் covid 19 தொற்று நிலைமை காரணத்தின் பேரில் இறுதி | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நேர்முகப் பரீட்சையை நடாத்த முடியாதுள்ளது. | |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆண்டறிக்கைகளை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 6,670,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் செலவினம் ரூபா 8,594,846 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,924,846 ஆன மதிப்பீட்டை விஞ்சி செலவிடப்பட்டிருந்ததுடன் அது 29 சதவீதமாகும். | மேலதிக செலவினத்தை விட கூடுதலான தொகையொன்றை அதிகாரசபையால் மானியம் மற்றம் செலவின மீள்நிரப்பல் மூலம் பெற்றுக்கொண்டிருந்தது | மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 08 பிரதான செயற்திட்டங் களுக்குரிய 09 உப பிரிவுகளின் மொத்த மதிப்பீட்டு நிதிஏற்பாடு ரூபா 8,381,000 ஆக இருந்ததுடன் அதில் பயன்படுத்தப்படாத அளவு ரூபா 6,935,050 ஆக இருந்தது. அது மொத்த மதிப்பீட்டின் 68 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் பரவியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செலவினங்களை செய்யாமல் இருக்க செயற்பாடுகளை 2021 ஆம் ஆண்டு வரை முன்கொண்டு வருவதற்கு உரிய விடயங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயற்திட்டங்களை செயற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

**4.3 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் தவிர்த்தல் சட்டத்தின் (6)(ஈ) பிரிவு மற்றும் 2013 யூன் 28 ஆந் திகதிய 37/1816 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் மூலப்பொருட்கள் பரீசிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படாமல் கடலுக்குள் வெளியேற்றுவதை தவிர்ப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அபாயகரமான சிகிச்சைக் கழிவுகள் நீண்ட குழாய் மூலமாக கடலுக்குள் நேரடியாக இடுவதை தவிர்ப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நீண்ட குழாய்கள் பவுசர்கள் மூலம் கொழும்பு கழிவுப் பொருட்களுக்கு மேலதிகமாக பௌசர் வண்டிகள் மூலமும் தொழிற்சாலைகள், வீடுகள் மற்றும் பிற இடங்களிலிருந்து சுத்திகரிக்கப்படாமல் கடலுக்குள் விடுகின்றன. இதற்காக கொழும்பு மாநகர சபை மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையுடன் பல கூட்டங்களை நடாத்தியுள்ளதுடன் அந்த நிறுவனங்கள் இதற்காக எந்த நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. இந்த விடயம் ஜனாதிபதி செயலகம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் மேல்மாகாண ஆளுநரின் செயலகம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய அரச நிறுவனங்களிலிருந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் அதிகாரசபையால் செயற்படுத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளது. | அபாயகரமான கழிவுப்பொருட்களான இரசாயன கழிவுப் பொருட்கள் நீண்ட குழாய்கள் மூலம் கடலுக்குள் நேரடியாக இடுவதை தவிர்ப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்தல் எடுக்கப்பட வேண்டும். |

4.4 **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையால் 2025 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 14 இன் கீழ் 05 பிரதான இலக்குகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது. இதற்கு இடையே கொரல் பாறைகள் சுத்திகரிப்பு, கொரல் பாறைகள் மீளவைப்பு, சதுப்பு நிலங்கள் மீள்மைப்பு மற்றம் சதுப்பு நில வளர்ப்பு போன்ற பிரதான இலக்குகள் செயலாற்றல் பரிசோதனையின் போது 2025 ஆம் ஆண்டளவில் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்காக செயற்படும் செயற்திறன் போதுமானதாக இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பவள அளவை பாறைகளை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதன்படி, எதிர்பார்த்த பாதுகாப்பு நிலை அடையப்படும். சதுப்புநிலம் காணி இனங்காணப்பட்டு வருகின்றதுடன், புத்தளம் பிரதேச செயலகத்தின் மூலம் சுற்றாடல் அமைச்சு மற்றும் அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன் இந்த சதுப்பு நிலங்களை மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திட்டங்களை செயற்படுத்தும் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |